(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **65.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 ஏப்ரல் 06 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**, சபாநாயகர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** கல்வி அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** சுற்றுலாத்துறை அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** சுகாதார அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி,** நீதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) *சீதா அரம்பேபொல,*** திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் நிவாட் கப்ரால்,** நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுசில் பிரேமஜயந்த,** கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜயந்த சமரவீர,** களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ நஸீர் அஹமட்

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ ஜகத் குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

**கௌரவ சாமர சம்பத் தசநாயக**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ றோஹண திஸாநாயக்க**

**கௌரவ சாரதீ துஷ்மந்த**

**கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய**

**கௌரவ இசுரு தொடன்கொட**

**கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த**

**கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன**

**கௌரவ எச். நந்தசேன**

**கௌரவ கயாஷான் நவனந்த**

**கௌரவ அசங்க நவரத்ன**

**கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ கிங்ஸ் நெல்சன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ அனுப பஸ்குவல்**

**கௌரவ நிமல் பியதிஸ்ஸ**

**கௌரவ ஜகத் புஷ்பகுமார**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ நலின் பிரனாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ றிஸாட் பதியுதீன்**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ வடிவேல் சுரேஷ்

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான டவர் மண்டப அரங்க மன்றத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்து இவ்வறிக்கையை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இவ்வறிக்கையை அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் முதலீடு செய்யப்பட்டு தாபிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT ) தொடர்பிலான விசேட அறிக்கை தொடர்பில் அக்குழுவின் இரண்டாவது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) பெபிலியவல, ஜெர்மன்வத்த, இல. 25/10/எஃப் எனும் முகவரியில் வதியும் திரு எல். ஈ. விஜேதுங்கவினது 2021.01.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர சமர்ப்பித்தார்.

(2) (i) கந்தான, த மெஸனோத் வீதி, இல. 27/பீ எனும் முகவரியில் வதியும் திருமதி ஏ.ஏ. என் பிரனாந்துவினது 2021.01.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கணேமுல்ல, வெலிபில்லேவ, இல. 270/2 எனும் முகவரியில் வதியும் திரு. உதய பிரசாத் சஞ்ஜீவ நெலுந்தெனியினது 2021.02.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) ராகம, பட்டுவத்த, இல. 75/பீ எனும் முகவரியில் வதியும் திருமதி டப்ளியூ. எஸ். மல்லிகா பெரேராவினது 2020.12.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நிமல் லான்சா சமர்ப்பித்தார்.

(3) தணமல்வில, ஹம்பேகமுவ, ஜனபத சந்தி எனும் முகவரியில் வதியும் திரு பரணகமகே பியதாஸவினது 2021.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ விஜித பேருகோட சமர்ப்பித்தார்.

(4) எலபடகம, ஹம்ஸியாவத்த, முன்பள்ளி வீதி, இல. 427/3 எனும் முகவரியில் வதியும் திரு ஏ. எம். ஏ. லத்தீபினது 2020.12.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா சமர்ப்பித்தார்.

(5) சூரியவெவ, அம்பலாந்தொடை வீதி, அமர அரிசி ஆலை எனும் முகவரியில் வதியும் திரு ஈ. எச். அமரசேனவினது 2020.11.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ திலிப் வெதஆரச்சி சமர்ப்பித்தார்.

(6) உஹுமீய, முதுன்ன, ''வீரசெவன'' எனும் முகவரியில் வதியும் திரு. எல். ஏ. என். பியசிறியினது 2021.01.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சாந்த பண்டார சமர்ப்பித்தார்.

(7) இரத்தினபுரி, படுகெதர வீதி, படுகெதர, இல. 04 எனும் முகவரியில் வதியும் திரு. எல். எச். எல் ராஜபக்ஷவினது 2021.2.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வருண லியனகே சமர்ப்பித்தார்.

(8) பதுளை, பதுலுபிடிய, இல. சீ/224 எனும் முகவரியில் வதியும் திரு. ஜீ. பீ. எச். சில்வாவினது 2021.01.10ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சாமர சம்பத் தசநாயக்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ அசோக்க பிரியந்த பிரேரித்தார். கௌரவ ரோஹண திஸாநாயக்க கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**5. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1) :** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

(கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2199/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 12.08 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்குவாராக” என கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.33 மணிக்கு கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2) :** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 14 ஆம் திகதிய 2206/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3) :** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ( கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 24 ஆம் திகதிய 2207/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4 ) ஆம் பிரிவின் கீழ் ஷங்கிரி-லா ஹொட்டேல்ஸ் லங்கா ( பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால்

ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 18 ஆம் திகதிய 2206/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2):** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் சினோலங்கா ஹொட்டேல்ஸ் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 18 ஆம் திகதிய 2206/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான தீர்மானம் :** பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 16(1) ஆவது பிரிவின் ஊடாக ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவல்களை நிறைவேற்றும் பொருட்டு அந்த ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்குப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

2015 ஆம் ஆண்டு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமனம் பெற்ற சனாதிபதி சட்டத்தரணி, திருமதி ஏ.ஏ.பி. தில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க அவர்களும், 2016 ஆம் ஆண்டில் அப்பதவிக்கு நியமனம் பெற்ற சனாதிபதி சட்டத்தரணி, திரு. சரத் ஜயமான்ன அவர்களும், அவர்கள் தாம் முன்பு வகித்த பதவியின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமனம் பெற்ற பின்பு கிடைக்கும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை விடவும் அதிக பெறுமதியைக் கொண்டிருந்தமையினால், அந்த அதிகாரிகளுக்குச் செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கு, அமைப/16/0947/702/040 ஆம் இலக்க, 2016.06.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2020.02.18 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/20/0443/201/012 ஆம் இலக்க, 2020.02.19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. டப்ளியூ.கே. தமித் விஜேரத்ன அவர்கள் 2020.01.21 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளதனாலும்;

திரு. டப்ளியூ.கே. தமித் விஜேரத்ன அவர்கள் தற்போதைய பதவிக்கு நியமனம் பெற்ற பின்பு அவருக்கு கிடைக்க வேண்டிய சம்பளம் முன்னைய பதவியின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை விடவும் மிகவும் குறைந்த பெறுமதியையுடையதாக உள்ளதாலும்; மற்றும்

திரு. டப்ளியூ.கே. தமித் விஜேரத்னவின் கல்விப் பின்னணி மற்றும் தொழில்சார் திறமைகளைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் தேவைப்படி அவர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளமையினால், இதற்கு முன்னைய முன்மாதிரிக்கு ஏற்ப அவரது முன்னைய பதவியான மேல் நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு ஏற்புடைய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அவருக்குத் தனிப்பட்டதாக அமையும் வகையில் 2020.01.30 ஆம் திகதி முதல் பின்வருமாறு செலுத்துவதற்கு 2020.02.19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக அனுமதி வழங்கப்பட்டதனாலும்:-

(அ) மேல் நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகளையும் அதேபோன்று 2020.01.30 ஆம் திகதி முதல் வழங்குவதற்கு; மற்றும்

(ஆ) தற்போதைய பதவிக்கு ஏற்புடைய உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதாயின், அதற்கு ஏற்புடைய கொடுப்பனவுகளைச் செலுத்தாமலிருப்பதற்கு.

அதற்கேற்ப, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (2 ) ஆவது பிரிவின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் திரு. டப்ளியூ.கே. தமித் விஜேரத்ன அவர்களுக்கு திரட்டு நிதியத்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. ஒத்திவைப்பு (அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை ஒழுங்குறுத்துதல்):** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ வீரசுமன வீரசிங்ஹ தலைமை தாங்குவாராக” என வர்த்தக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.56 மணிக்கு கௌரவ வீரசுமன வீரசிங்ஹ தலைமை தாங்கினார்.)

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு தலைமை தாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2021 ஏப்ரல் 07 ஆம் திகதி புதன்ழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.